# HUMAN RESOURCE DEVELOPMENT AND RESEARCH ORGANISATION

Established under the guidance of Late.Mr.G.BhujangaRao I.A.S.,
and run by Government Regd Trust U REACT )
Dharmapuri - 636 701.

# மாநில அளவிலான ஓவியப் போட்டி - 2018

மனிதவள மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி மையம் தெய்வத்திரு. ஜி.புஜங்கராவ் I.A.S., அவர்களின் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனையின் பேரில் 1995-ம் வருடம் ஆரம்பிக்கப்பட்டது. பள்ளி, கல்லூரி மாணவர்களின் உள்திறனை வெளிச்சமிடும் வகையில் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகளும், சான்றிதழ்களும், வெற்றிபெற்ற மாணவர்களுக்கும் கலந்து கொள்ள ஊக்குவித்த கல்வி நிலையங்களுக்கு கேடயங்களும் வழங்கப்படுகின்றன. மனிதவள மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பரிசளிப்பு மற்றும் விருது வழங்கும் விழாக்களில் மூத்த I.A.S அதிகாரிகளும், கல்வி அதிகாரிகளும், கல்வியாளர்களும், அறிஞர்களும் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும், விருதுகளும், சான்றிதழ்களும் வழங்கி கௌரவித்து வருகிறார்கள். மனிதவள விருது பெற்ற ஆசிரியர்கள் சிறந்த ஆசிரியர்களுக்கான மாநில மற்றும் மத்திய அரசின் விருதுகளையும் பெற்றிருக்கிறார்கள். மனிதவள மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி மைய செயல்பாடு பற்றிய விவரங்களை எமது இணையதளத்தில் பார்வையிடலாம்.










## மாநில அளவிலான ஓவியப் போட்டி - 2018

பள்ளி மாணவ, மாணவியரின் திறனை வெளிப்படுத்துவதற்கும், மேம்படுத்துவதற்கும் ஓவியம் வரைதலும், வண்ணம் தீட்டுதலும் பேருதவி புரிவதாக கண்டறியப்பட்டுள்ளது. எனவே நம் பள்ளி மாணவ, மாணவியர் திறனை மேம்படுத்தும் நோக்கில் ஓவியம் மற்றும் வண்ணம் தீட்டும் போட்டியை மனிதவள மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி மையம் 15 வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து நடத்தி வருகிறது.

ஓவியப் போட்டியில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள LKG முதல் 12-ம் வகுப்பு வரை அனைத்து நிலை மாணவர்களும் கலந்து கொள்ளலாம். ஒவ்வொரு வகுப்பிற்கும் சிறந்ததாக தேர்வு செய்யப்படும் முதல் மூன்று ஓவியங்களுக்கு கீழ்கண்டவாறு பரிசுகள் வழங்கப்படும்.இப்போட்டியில் கலந்து கொள்ளும் அனைத்து மாணவர்களுக்கும் இப்போட்டியில் கலந்து கொண்டதைப் பாராட்டி பங்கேற்பு சான்றிதழ் வழங்கப்படும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முதல் பரிசு | - | ரூ. | 1000 ரொக்கம் | - | சான்றிதழ் | - | பதக்கம் |
| இரண்டாம் பரிசு | - | ரூ. | 500 ரொக்கம் | - | சான்றிதழ் | - | பதக்கம் |
| கூடுதல் இரண்டாம் பரிசு | - | ரூ. | 250 ரொக்கம் | - | சான்றிதழ் | - | பதக்கம் |

**ஓவியப்போட்டிக்கான தலைப்புகள் மற்றும் இதர விவரங்கள் பெற பள்ளி முகவரியுடன் எங்கள் hrdaro2017@gmail.com க்கு இமெயில் அனுப்பினால் prospectus நகல் பள்ளி இமெயிலுக்கு அனுப்பி வைக்கப்படும்.**

**போட்டியில் கலந்த கொள்ள விரும்பும் மாணவ, மாணவியர்
பள்ளி தலைமையாசிரியர் அல்லது பள்ளி முதல்வரை அணுகவும்.**